सत्यमेव जयते

# இளம் பருவத்தினர் மற்றும் மாணவர்களுக்கான இணைய பாதுகாப்பு (Cyber Safety) வழிகாட்டி நூல்




உள்துறை அமைச்சரகம்
இந்தியா

# நாங்கள் குழந்தைகளை தழைத்தோங்க செய்கிறோம்

'டெர்ரே டெஸ் ஹோம்ஸ் நெதர்லாந்து' (TdH Netherlands) என்பது குழந்தைகள் மீதான சுரண்டலைத் தடுக்கும் நோக்கில் செயல்படும் உலகளாவிய குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பாகும். ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா முழுவதும் குழந்தைத் தொழிலாளர், குழந்தை பாலியல் சுரண்டல், குழந்தைகள் மீதான வன்முறைகள் மற்றும் மனிதாபிமான உதவியை உறுதி செய்தல் போன்றவற்றில் இவ்வமைப்பு வேலை செய்கிறது.

Terre des Hommes Netherlands

சில்ட்ரன் ஆஃப் இந்தியா பவுண்டேஷன் (Children of India Foundation), ஒரு பதிவு செய்யப்பட்ட பொது தொண்டு அறக்கட்டளை அமைப்பாகும். TdH நெதர்லாந்துடன் இணைந்து செயல்படுகிறது. CIF தற்போது குழந்தை பாதுகாப்பு, சுகாதாரம், வாழ்வாதாரம் மற்றும் கல்வி தொடர்பான துறைகளில் சமூகத்தின் விளிம்புநிலை பிரிவினருக்கு அதிகாரமளிக்கவும் சமூகத்தின் திறனை வளர்பதையும் திட்டமாகக் கொண்டு செயல்படுகிறது.

Towards a healthy, safe & secured childhood
CHILDREN OF INDIA FOUNDATION

Thozhamai
solidarity for rights

'தோழமை' என்றால் இணைந்து செயல்படல் என்ற நிலைப்பாட்டோடு உரிமைகளுக்கான வள மையமாக 2006 ஆண்டு உருவாக்கப்பட்டது. சமூகத்தில், உரிமை சார்ந்த பண்பாட்டை வளர்த்தெடுக்க தோழமை பணியாற்றி வருகிறது. கல்வி, குழந்தைகள் பாதுகாப்பு, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைக்கு முடிவு கட்டுதல், ஆன்லைன் பாதுகாப்பு, இளம்பெண்கள் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல், இளைஞர்களின் பொருளாதார வலுவூட்டல் மற்றும் குழந்தை நேய தமிழ்நாட்டை உருவாக்கும் பணிகளை பல்வேறு தளங்களில் முன்னெடுத்து வருகிறது.

TdH Netherlands, CIF, தோழமை ஆகிய நிறுவனங்கள் இணைத்து குழந்தைகள் மீதான இணையவழி பாலியல் சுரண்டலுக்கு எதிரான திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்திய அரசின் உள்துறை அமைச்சரகம் வெளியிட்டுள்ள இளம் பருவத்தினர் மற்றும் மாணவர்களுக்கான இணைய பாதுகாப்பு வழிகாட்டி நூலை **'தோழமை'** நிறுவனத்தின் சார்பில் மொழிப்பெயர்ப்பு செய்கிறோம். இந்நூலை மொழிபெயர்ப்பு செய்த இணைய பாதுகாப்பு நிபுணர் **'சைபர் புத்தா' வினோத் ஆறுமுகம்**, அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**THOZHAMAI**
#149/42, Ellaiyamman Koil Street, Vannarthurai, Adyar, Chennai - 600 020
☎ 044-24462703 thozhamai@gmail.com